உ

வெளியீடு எண் 108

திருச்சிற்றம்பலம்



# சந்தானாசாரியர்

# மற்றும்

# ஸ்ரீ நம்பியாண்டார் நம்பி, ஸ்ரீ சேக்கிழார்

## அருச்சனை மலர்

நாற்பத்திரண்டாவது ஆண்டு நிறைவு விழாவில்
தொண்டைமண்டல ஆதீனம் 231-ஆவது
குருமகா சந்நிதானம்
சீலத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய
சுவாமிகள் அவர்களால் வெளியிடப்பெற்றது

பொருளுதவும் புண்ணியர்: திருமுறைத்தொண்டர்
திரு. K.O.S. நாகராஜன் அவர்கள்.

பன்னிரு திருமுறை மன்றம்
தெற்காடி வீதி, ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில்
மதுரை.

உ

சைவசமய ஆசாரியர்கள், சந்தான குரவர்கள், சேக்கிழார் முதலியோர் குருபூசைவிழாக்களை ஆண்டு தோறும் கொண்டாடிவரும் மரபுடையது எம் மன்றம்.

குருபூசை நாள்களில் சைவத்திரு காரைக்குடி ராம. சொ. சொக்கலிங்க ஐயா அவர்களால் இயற்றப் பெற்ற தமிழருச்சனைகளைஓதி மலர்வழிபாடுசெய்து வருகின்றோம். மற்ற அமைப்பினரும் இவ்வருச்சனை நூலைப் பெற்று போற்றி வழிபாடு நிகழ்த்த உறுதுணையாக இவ்வருச்சனை மலரை வெளியிட்டுள்ளோம். இதனை வெளியிட உதவுபவர் திருமுறைத்தொண்டர் ஒண்டிப்பிலி சர்பத் கம்பெனி உரிமையாளர் திரு. K.O.S நாகராஜன் ஆவார். மன்றப்பணிகள் எல்லாவற்றிலும் முதன்மைப் பங்கேற்கும் பேரன்பர். இவரும் இவர்தம் குடும்பத்தாரும் எல்லா நலங்களும் பெற்று நீடினிது வாழ அங்கயற்கண்ணி பங்கராகிய ஆலவாய்ச் சொக்கலிங்கப் பெருமானைப்பிரார்த்திக்கின்றேன்.

அன்பர்கள் பெற்றுப் பயன் கொள்க!

அன்பன்

நீ.சீ. சுந்தரராமன்

(கூடல் சுந்தரன்)

21-12-95

மதுரை

உ
சிவமயம்

# ஸ்ரீ மெய்கண்ட சிவார்ச்சனை

திருவெண்ணெய் மெய்கண்ட சிவனே போற்றி
அருணிறை தருசுவை யமுதே போற்றி
வெண்காட் டரனருள் விமலா போற்றி
பண்காட் டருந்தமிழ்ப் பயனே போற்றி
சம்பந்த ரெனவரு தற்பர போற்றி
எம்பந்த நீத்தரு ளிறைவா போற்றி
வேளாண் குலதவ விளைவே போற்றி
மீளா வாழ்வருள் விமலா போற்றி
கார்காத் தவர்குலக் கதிரே போற்றி
நார்வாய்த் தவர்பெறு நலனே போற்றி
அச்சுத ரருந்தவத் தரசே போற்றி
இச்சக முயவரு மிறைவா போற்றி
சுவேத வனப்பெயர்ச் சோதீ போற்றி
தவாதசித் தாந்தந் தருமுதல் போற்றி
சிதவனத் துதயமா தேசிக போற்றி
முதமுற வருண்மல மோசக போற்றி
அவ்வனம் வீற்றிருந் தருளினை போற்றி
தெய்வப்பெண் ணாகடஞ் சென்றனை போற்றி
திருப்பெண் ணாகடச் செல்வா போற்றி
அருட்பர ஞானத் தமுதே போற்றி
தூங்கானை மாடந் தொழுபர போற்றி
பாங்கார் சிவகுரு பரனே போற்றி
மாதுலர் திருவெண்ணெய் வந்தனை போற்றி
வீதியி லாடல்செய் விமலா போற்றி
தொல்கயி லைப்பரஞ் சோதிசேய் போற்றி
பல்கலைத் தெளிபொருள் பகர்முதல் போற்றி
அவிர்பரஞ் சோதிவந் தருள்குரு போற்றி
சிவஞான போதமா தேசிக போற்றி
கண்ணுதல் கரந்துறுங் கண்மணி போற்றி

மண்ணுல குயவரு வண்மணி போற்றி
பொல்லா ரிணைமலர் புனைசிர போற்றி
நல்லார் பரவரு ணாயக போற்றி
அச்சுதர் புயத்துறு மருமணி போற்றி
முச்சகம் போற்று முதல்வா போற்றி
ஆணவம் வினவினர்க் கருண்முதல் போற்றி
மாணவ ராக்கி மகிழ்குரு போற்றி
அவ்வரு ணந்திதீக் காதிப போற்றி
உய்வரு ளடிசிரத் துய்த்தனை போற்றி
தேறுபஃ றீக்கைகள் செய்தனை போற்றி
ஆறெண் மருக்குமுன் னாக்கினை போற்றி
ஏழெழு மாணவர்க் கிறையவ போற்றி
வாழியா கமந்தமிழ் வழங்கினை போற்றி

1

அவனவ ளதுமுத லருளினை போற்றி
அவைமூ வினையினென் றருளினை போற்றி
தோற்றிய திதியே சொற்றனை போற்றி
ஈற்றினின் மலத்துள தென்றனை போற்றி
அந்தமே யாதியென் றருளினை போற்றி
வந்தருள் பதியுண்மை வயக்கினை போற்றி
இதன்பொழிப் புரைத்துக்கொள் கென்றனை போற்றி
முதம்பெற வடியர்க்கு மொழிந்தனை போற்றி

2

அவையே தானே யருளினை போற்றி
சிவையினீங் காமை தெரித்தனை போற்றி
ஆணையின் வினைநிகழ் வறைந்தனை போற்றி
காணுமா யையுமதிற் காட்டினை போற்றி
பாச வுண்மை பகர்ந்தனை போற்றி
பேசுபுன ருற்பவம் பிறக்கினை போற்றி

3

உளதான் மாவென் றுரைத்தனை போற்றி
தளர்வா திகண்முரண் சாய்த்தனை போற்றி
பசு வுண்மை நூன்முறை பகர்ந்தனை போற்றி

4

இசையுயிர் கரணமன் றென்றனை போற்றி
நுண்ணுணர் வுறச்சார்த னுவன்றனை போற்றி
நண்ணமைச் சரசுநேர் நவின்றனை போற்றி
ஆவி யிலக்கண மறைந்தனை போற்றி
கேவலா வத்தைகள் கிளத்தினை போற்றி

5

உயிராற் பொறியுணர் வுரைத்தனை போற்றி
உயிரரு ளாலுணர் வோதினை போற்றி
இதுகாந் தத்திரும் பென்றனை போற்றி
முதுபா சத்தியல் மொழிந்தனை போற்றி
சகலா வத்தைகள் சாற்றினை போற்றி
தகுமா தவர்தொழு சற்குரு போற்றி

6

இருதிறத் தறியொணா தென்றனை போற்றி
அருள்சிவ சத்தென் றறைந்தனை போற்றி
அதுசிவ ஞானத்தோர் வருளினை போற்றி
பதிசிறப் பிலக்கணம் பகர்ந்தனை போற்றி
சுத்தா வத்தைமாண் சொற்றனை போற்றி
உய்த்தோர்ந் துயுநிலை யுணர்த்தினை போற்றி

7

இரண்டலா வான்மா விசைத்தனை போற்றி
இருதிற னறிவுள தென்றனை போற்றி
சாதனக் கதிகாரி சாற்றினை போற்றி

8

சாதன மிதுவெனத் தந்தனை போற்றி
தம்முதல் குருவுமாய்த் தருமெனல் போற்றி
அம்முறை யடிபுக லருளினை போற்றி

9

பசுஞானத் துணராமை பகர்ந்தனை போற்றி
இசைசிவ ஞானத் தோர் கென்றனை போற்றி
ஓதுகென் றைந்தெழுத் துரைத்தனை போற்றி
சாதனம் புரிமுறை சாற்றினை போற்றி

10

அவனாதல் போலென் றறைந்தனை போற்றி
சிவனா யிறைபணி தெரித்தனை போற்றி
பாச நீக்கம் பகர்ந்தனை போற்றி

11

விழிக்குயிர் காட்டனேர் விளம்பினை போற்றி
எழற்கிறை யுயிர்க்கருண் மென்றனை போற்றி
பெத்தத்து முதவியல் பிறக்கினை போற்றி
அத்தகு பேரரு ளறிவித்தாய் போற்றி
என்றுஞ் சிவனரு ளிலக்கினை போற்றி
நன்றியோர்ந் தியன்முறை நவின்றனை போற்றி
இதனை யயர்வற லிசைத்தனை போற்றி
இதுநினை தொறுநெகிழ் வியம்பினை போற்றி
உருகுளத் தன்பொளிர் வுரைத்தனை போற்றி
தெருளுமெய் யன்புறுதி தெரித்தனை போற்றி
அரன்கழல் செலுமென வருளினை போற்றி
வருஞ்சிவப் பேறு வயக்கினை போற்றி
அயராமை யன்புசெல வறைந்தனை போற்றி
வியன்ஞான மிச்சைசெயல் விளக்கினை போற்றி
ஆன்மமுச் சத்திநிகழ் வருளினை போற்றி
தேன்மலி குவளைத்தார்த் தேசிக போற்றி

12

செம்மலர் நோன்றாட் சிவமுதல் போற்றி
அம்மலங் கழுவுசீ ரமலா போற்றி
அன்பரொடு சேர்த்தரு ளரசே போற்றி
இன்பநிலை தந்தரு ளீசா போற்றி
மாலற நேயம் வழங்கிறை போற்றி
மேலையர் வேடம் விளக்கினை போற்றி
ஆலயஞ் சிவமென வருள்பர போற்றி
சீலர்சொன் மெய்கண்ட சிவனே போற்றி

ஸ்ரீ மெய்கண்ட சிவார்ச்சனை

முற்றிற்று

உ

சிவமயம்

# ஸ்ரீ அருணந்தி சிவார்ச்சனை

திருத்துறை யூர்வரு சிவனே போற்றி
அருத்திதந் தருள்சிவா சாரிய போற்றி
அருணந்தி நாமவா ரமுதே போற்றி
இருணந்த வொளியரு ளீசா போற்றி
கயிலைநான் மடாலயக் கதிரே போற்றி
உயமகி வருகதி ரொளியே போற்றி
அயன்முக வேதியர்க் கருள்குரு போற்றி
உயர்சிவ முகமுனி வோர்மணி போற்றி
அநாதிசை வார்ச்சக வருமணி போற்றி
மநாதிகள் கடந்த வரமணி போற்றி
சிவசாதி முனிகுல சிகாமணி போற்றி
அவிர்நால் வருணர்க் கருண்மணி போற்றி
மகிழாதி சைவகுல மாமணி போற்றி
நிகமாக மாதிக ணிறைமணி போற்றி
பரசக லாகம பண்டித போற்றி
மருவுசீ டர்க்கவை வழங்கிறை போற்றி
அவரான்மெய் கண்டாரை யடுத்தனை போற்றி
கவரா ணவம்வினாய்க் களித்தனை போற்றி
மெய்கண்டார் கைச்சுட்டின் விளங்கினை போற்றி
கைகண்ட தெய்வமெனக் கண்டனை போற்றி
பொய்விண் டொழியநேர் புகுந்தனை போற்றி
நையன்பி னடிபற்றி நமந்தனை போற்றி
அவரெடுத் தருள்பே றடைந்தனை போற்றி
சிவமய னாகித் திகழ்ந்தனை போற்றி
அவர்தரு நூற்பொரு ளனைத்தையும் போற்றி
உவகையின் விரித்தினி துரைத்தனை போற்றி
சிவஞான சித்தியத் தெருளுநூல் போற்றி
தவர்மேற் கொண்டுயத் தந்தனை போற்றி

பரபக்கத் துலகர்கோள் பாற்றினை போற்றி
உரைதரு பௌத்தநான் கொழித்தனை போற்றி
இருவகைச் சமணிரு ளிரித்தனை போற்றி
கருமமே பரமெனல் கழித்தனை போற்றி
சத்தமே பரமென றவிர்த்தனை போற்றி
மித்தைமா யாவாதம் விலக்கினை போற்றி
பொராப்பரி ணாமம் போக்கினை போற்றி
நிரீச்சுர சாங்கிய நீக்கினை போற்றி
அபத்தவைந் திருட்டுநூலழித்தனை போற்றி
சுபக்கசித் தாந்தந் துலக்கினை போற்றி
விரியு மளவைகள் விளக்கினை போற்றி

1

ஒருவனோ டொருத்தியென் றோதினை போற்றி
உதிப்பது மீறுமென் றுரைத்தனை போற்றி
மண்ணினிற் கடாதி வழங்கினை போற்றி
அயன்றனை யாதியா வறைந்தனை போற்றி

2

உலகெலா மாகிவே றுரைத்தனை போற்றி
ஒன்றென மறைகளென் றோதினை போற்றி
இருவினை யின்பதுன் பிசைத்தனை போற்றி
அரன்விதி யருளதென் றறைந்தனை போற்றி
மெய்தரு பூத மொழிந்தனை போற்றி
எய்சிவஞ் சத்தி யிசைத்தனை போற்றி
சத்தியாய்ச் சத்திதான் சாற்றினை போற்றி

3

உயிரெனப் படுவ துரைத்தனை போற்றி
உடலினறி வதையறிந் துரைத்தனை போற்றி

4

உணர்வன கரணமெனி லோதினை போற்றி
கருவியா மனமுங் கழறினை போற்றி
அறிவிச்சை செயல்க ளறைந்தனை போற்றி
படைகொடு பவனி பகர்ந்தனை போற்றி

5
பொறிபுலன் கரணம் புகன்றனை போற்றி
இறைவனே முதலபா விசைத்தனை போற்றி
6
அறிவுறும் பொருளோ வறைந்தனை போற்றி
ஆவதா யழிவதா வருளினை போற்றி
தத்துவஞ் சத்தாதி சாற்றினை போற்றி
7
அனைத்துஞ்சத் தென்னினொன் றறைந்தனை போற்றி
சத்தசத் தறிவமுன் சாற்றினை போற்றி
8
மன்னவன் றன்மகன் வயக்கினை போற்றி
உரைதரு முதலபா வோதினை போற்றி
புறச்சமய நெறிநின்றும் புகன்றனை போற்றி
ஓதுசம யம் வேத முறைத்தனை போற்றி
சித்தாந்த ஞானநூல் செப்பினை போற்றி
தானஞ் சிவஞானஞ் சாற்றினை போற்றி
கருவிகழி பன்னிறங் கழறினை போற்றி
9
பாசஞா னத்தாலும் பகர்ந்தனை போற்றி
வேதசாத் திரமிருதி விளம்பினை போற்றி
குறித்தடி கண்டவிவை கூறினை போற்றி
அஞ்செழுத் தந்தரி யறைந்தனை போற்றி
புறம்பேயு மிந்தனம் புகன்றனை போற்றி
10
இவனுல கியான்செய் யியம்பினை போற்றி
இந்திரியஞ் சலமில னிசைத்தனை போற்றி
11
காயமொழி பரஞானங் கழறினை போற்றி
அநாதிதெரி வாணவநெல் லறைந்தனை போற்றி
எவ்விடத் தெங்குஞ்சென் றிசைத்தனை போற்றி
செம்பிரத சிவனிரும்பு செப்பினை போற்றி
12

செங்கமலத் தாளிணை திகழ்த்தினை போற்றி
ஈசனுக்கன் பறிவரி யிசைத்தனை போற்றி
திருக்கோயில் ஞானம் செப்பினை போற்றி
மந்திர பரப்பிரமம் வழங்கினை போற்றி
குருநே ரிறைவிழைஇக் குழைந்தனை போற்றி
இருபா விருபஃ திசைத்தனை போற்றி
காண்பராட் பாலவர் கழறினை போற்றி
அறிவோ வறியேனோ வறைந்தனை போற்றி
பந்தம் வந்தவா பகர்ந்தனை போற்றி
அருண்முனில் லாதென் றறைந்தனை போற்றி
இலதில துளதுள திசைத்தனை போற்றி
அவத்தை முதலடி யறைந்தனை போற்றி
கண்டவா றேதெனக் கழறினை போற்றி
ஒடுங்கக் கருவியா துரைத்தனை போற்றி
நின்றனை யென்பனோ நிகழ்த்தினை போற்றி
இரண்டா மாறென் னிசைத்தனை போற்றி
வியங்கோ ளாளன் விளம்பினை போற்றி
சொல்லெதிர் சொல்லாமை சொற்றனை போற்றி
ஆயன்கொல் பாதவத் தறைந்தனை போற்றி
உள்ளது போகா துரைத்தனை போற்றி
நின்னருள் யாதுக்கு நிகழ்த்தினை போற்றி
விச்சை சாலவும் விளம்பினை போற்றி
சொற்றொழும் புன்செயல் சொற்றனை போற்றி
எனக்கே யதிசய மென்றனை போற்றி
உருவென வந்தெடுத் துரைத்தனை போற்றி
அற்றவர்க் கற்றவ னருளினை போற்றி
ஒருகண் ணெனமுடித் துவந்தனை போற்றி
குருமுன் றுதித்திவை கூறினை போற்றி
மிகுசைவ நுண்பொருள் விளக்கினை போற்றி
திகழரு ணந்தி சிவனே போற்றி

ஸ்ரீ அருணந்தி சிவார்ச்சனை
முற்றிற்று.

உ
சிவமயம்



# ஸ்ரீ மறைஞான சம்பந்த சிவார்ச்சனை

திருக்களாஞ் சேரிவாழ் சிவனே போற்றி
திருத்தில்லை யீசமா திரவாச போற்றி
தில்லையீ சான திசாதிப போற்றி
அல்லைநீத் தொளிதரு மருமணி போற்றி
சதுர்மறை ஞான சம்பந்த போற்றி
முதுசிவா கமநலன் மொழிகுரு போற்றி
பெண்ணா கடப்பதிப் பெருந்தவ போற்றி
பண்ணார்வே தியகுலோற் பனமுதல் போற்றி
அந்தணர் குலம்விளக் கருமணி போற்றி
பந்தநீத் துயவருள் பாவன போற்றி
திகழ்பரத் துவாசகோத் திரமணி போற்றி
சகமுய வருமறைச் சம்பந்த போற்றி
தாண்டவ தரிசன தற்பர போற்றி
ஆண்டவனடிமைதேற் றருமணி போற்றி
அருணந்தியடிபணிந் தமைகுரு போற்றி
இருணந் தருளுந் திறையவ போற்றி
அருணந்தி தீக்கைபெற் றவிர்மணி போற்றி
தெருண்முந் தின்ப தேசிக போற்றி
அருணந்தி குருசே யடியிணை போற்றி
மருள்வென் றுயவருள் வழங்கிறை போற்றி
அருணந்தி யருளுஞா னாகர போற்றி
பொருளொன் றுறவருள் பூரண போற்றி
சிவஞான போதாதி தெருட்டிறை போற்றி
தவமாண் பிலக்குறு தத்துவ போற்றி
பதிபசு பாசமெய் பகர்குரு போற்றி
முதுமல மோசன முதல்வ போற்றி
சுத்தாத் துவிதமே துலக்கிறை போற்றி
முத்தான்ம சிரபத முளரிய போற்றி

வைதிக சைவம் வளர்முதல் போற்றி
தெய்வசந் மார்க்க சிற்குரு போற்றி
சைவசித் தாந்த சற்குரு போற்றி
உய்வமுத் தாந்த வொண்மணி போற்றி
நாதாந்த மேலொளிர் நாயக போற்றி
போதாந்த நிலைதரு பூரண போற்றி
பஞ்ச கலாந்த பரகுரு போற்றி
அஞ்சலென் றருள்கர வபய போற்றி
சரியைகிரி யாயோகந் தருபர போற்றி
அரியமெய்ஞ் ஞானநல் கருட்குரு போற்றி
பற்பல புறநெறி பாற்றிறை போற்றி
சிற்பர நெறிநிலை தேற்றிறை போற்றி
சிவநிய மர்க்கருள் செய்பர போற்றி
அவிர்தரு மதீதத் தமர்பர போற்றி
அருளுமா பதிக்கினி தருள்குரு போற்றி
பருவமேன் முதிருமா பார்த்தனை போற்றி
பகற்குரு டெனுமனுப் பகர்ந்தனை போற்றி
இகப்பற வாங்குவந் திருந்தனை போற்றி
செத்த கட்டைமந் திரகுரு போற்றி
அத்திற னோர்ந்துற வருளினை போற்றி
முழங்கையி னமுதருண் முதல்வ போற்றி
வழங்குசிவ தீக்கை வயக்கினை போற்றி
உமாபதிக் கருணிறை வுறுத்தனை போற்றி
அமாசிவ மாக்கி யருளினை போற்றி
கொற்றங் குடியுறக் கூறினை போற்றி
சிற்றம் பலவர்சீர் தேற்றினை போற்றி
நிலவு தொழிற்பதி நிகழ்த்தினை போற்றி
உலகு சடமென் றொழித்தனை போற்றி
குலால னுவமை கூறினை போற்றி
எலாமுஞ் சிவமென் றிசைத்தனை போற்றி
உலகாய் வேறுட னுரைத்தனை போற்றி

மலமை வகைநிலை வயக்கினை போற்றி
தவகுலப் பிறப்பருமை சாற்றினை போற்றி
அவநெறிச் செலாநல னருள்குரு போற்றி
வாழ்வெனு மையன் மடித்தனை போற்றி
தாழ்வெனுந் தன்மையே தந்தனை போற்றி
மானுடம் வகுத்தது வயக்கினை போற்றி
ஊனுடம் பழிநிலை யுணர்த்தினை போற்றி
பசுவுண்மை யேதுவிற் பகர்குரு போற்றி
இசையுமே துவின்வகை யிலக்கினை போற்றி
உயிரிய லிவையென வுரைத்தனை போற்றி
மயர்மல வகையியல் வயக்கினை போற்றி
அருள்பதி யிலக்கண மறைந்தனை போற்றி
இருதிறத் தறிவரி தென்றனை போற்றி
பதிஞானத் தறிவதாப் பகர்ந்தனை போற்றி
அதுசிவ சத்தென வருளினை போற்றி
இரண்டையு முயிருணர் வென்றனை போற்றி
இரண்டுமன் றுயிரென் றிசைத்தனை போற்றி
சார்ந்ததன் மைத்தெனச் சாற்றினை போற்றி
ஏய்ந்த சதசத் தென்றனை போற்றி
சாதன வதிகாரி சாற்றினை போற்றி
சாதன மிதுவெனத் தயக்கினை போற்றி
மன்னருட் குருவரல் வயக்கினை போற்றி
துன்னுயிர் மூவகை துலக்கினை போற்றி
அவ்வகைக் கருண்முறை யறைந்தனை போற்றி
செவ்விதா றத்துவாத் தெரித்தனை போற்றி
அவையைங் கலையுட்சார் வறைந்தனை போற்றி
உவகைநான் மார்க்க முரைத்தனை போற்றி
ஐந்துஞா னார்ச்சனை யறைந்தனை போற்றி
உந்துபதி ஞானத்தோர் வுரைத்தனை போற்றி
அஞ்செழுத் துரைமுறை யருளினை போற்றி
விஞ்சுசா தனஞ்செயல் விளம்பினை போற்றி

நாம்பர பசுஞான நசித்தனை போற்றி
ஆம்பர சிவஞான மருளினை போற்றி
ஐந்தெழுத் தாற்பூசை யறைந்தனை போற்றி
முந்துபூ சனைமுறை மொழிந்தனை போற்றி
உயிர்சிவ மாகுமாண் புரைத்தனை போற்றி
மயர்தன் பணியறல் வயக்கினை போற்றி
என்றுங்காட் டிக்காண் பிசைத்தனை போற்றி
நன்றிமற வாமை நவின்றனை போற்றி
சிவபத நிழல்செலல் செப்பினை போற்றி
சிவதளி வேடமெய் திகழ்த்தினை போற்றி
ஒளிருமா பதிதுதி யுவந்தனை போற்றி
தெளிவினா வெண்பாச் செவியினை போற்றி
ஒளியிருண் முதலகேட் டுவந்தனை போற்றி
அளியொடு கேட்டவைக் கருள்குரு போற்றி
திருமருதச் சம்பந்த தேசிக போற்றி
அருணிறை சைவ வணிமணி போற்றி
திகழ்சிவத் துவந்தரு சிவகுரு போற்றி
தருமறை ஞான சம்பந்த போற்றி

ஸ்ரீ மறைஞான சம்பந்த சிவார்ச்சனை

முற்றிற்று.

உ

சிவமயம்

# ஸ்ரீ உமாபதி சிவார்ச்சனை

திருவரு ளுமாபதி சிவனே போற்றி
பருவநன் குணர்ந்தருள் பவனே போற்றி
சோணாட் டருந்தவச் சோதீ போற்றி
சேணாட் டருந்தொழுஞ் சிவனே போற்றி
மறைக்குலம் விளக்க வருகுரு போற்றி
அறத்துறை யந்தண ரதிபதி போற்றி
தில்லையந் தணர்குலச் செம்மணி போற்றி
எல்லையி லருள்புரி யிறையவ போற்றி
மூவாயிரத்தோர் முழுமணி போற்றி
நாவார் பலகலை நாயக போற்றி
நிகம சிவாகம நிறைகுரு போற்றி
தருசிவ தீக்கா சமற்கார போற்றி
தீக்காபி டேகமா தேசிக போற்றி
வாக்காதி கடந்தொளிர் மாதவ போற்றி
சித்தாந்த சைவ தேசிக போற்றி
உய்த்தோர்ந் தவர்க்கரு ளும்பர போற்றி
சரியைமுன் னான்குந் தருகுரு போற்றி
விரியுமெய்ந் நூலெலாம் விளக்கிறை போற்றி
சிற்சபா பூசக தேசிக போற்றி
உற்சவா திகள்புரிந் தொளிர்குரு போற்றி
சிவாகம விதிமுறை செய்குரு போற்றி
தவாதபூ சாதிய தருகுரு போற்றி
பௌட்கர விருத்தி பகர்ந்தனை போற்றி
சிவத்தனி நெறிநலந் திகழ்த்தினை போற்றி
சிதம்பர மான்மியந் தெரித்தனை போற்றி
இதந்தரு பன்னூ லிசைத்தனை போற்றி
கோயிற் புராணஞ்செய் குருமணி போற்றி
வாய்மைப் பதிக்கோவை வழங்கினை போற்றி

திருப்பதி கக்கோவை செய்தனை போற்றி
அருட்பெறு நலம்பல வருள்குரு போற்றி
திருமுறை கண்டநூல் செப்பினை போற்றி
தருமொரு நம்பிசீர் சாற்றினை போற்றி
மாக்கதை நோக்கி மகிழ்ந்தனை போற்றி
சேக்கிழார் புராணஞ் செய்தனை போற்றி
அவரடி பரவுபே ரன்பினை போற்றி
சிவநலந் தருமெனத் தெரித்தனை போற்றி
மறைஞான சம்பந்தர் மகிழ்சுத போற்றி
இறைஞான மவர்தர வேய்ந்தனை போற்றி
கொற்றங் குடியுறை குருபர போற்றி
குற்றங் கடிந்தருள் குணமணி போற்றி
அவமார்க் கந்தவிர்த் தவிர்குரு போற்றி
சிவமா யமர்ந்தருள் சிற்பர போற்றி
சிற்றம் பலவர்பூ சித்சிவ போற்றி
உற்றங் கிறைஞ்சினர்க் குணர்த்திறை போற்றி
இறைபுகழ் சீட்டுப்பெற் றிறைஞ்சினை போற்றி
நிறைவுபெற் றாற்கரு ணின்மல போற்றி
முள்ளிக்கு மின்பருண் முன்னவ போற்றி
உள்ளற்கு மரியசீ ரொண்பொருள் போற்றி
எண்ணூல்சித் தாந்தமுற் றியம்பினை போற்றி
கண்ணூர் சிவப்பிர காசநூல் போற்றி
அதுபொது வுண்மைபாத் தருள்குரு போற்றி
முதுவுணர் வினர்பெற மொழிந்தனை போற்றி
காப்பினு முப்பொருள் காட்டினை போற்றி
சீர்ப்பா யிரத்துமெய் தெளித்தனை போற்றி
சிவன்முதற் சந்தானர்த் திகழ்த்தினை போற்றி
அவன்மகா ரவரென் றறைந்தனை போற்றி
இவர்சைவ சந்தான ரென்றனை போற்றி
நவில்குரு வணக்க நயந்தனை போற்றி
நூற்கருத் தினின்முற்று நுவன்றனை போற்றி

பாற்புறச் சமயங்கள் பாற்றிறை போற்றி
வேதாந்தத் தெளிவு விளம்பினை போற்றி
ஈதேசித் தாந்தமென் றிலக்கினை போற்றி
சிவதீக் காதிய திகழ்த்தினை போற்றி
அவையடக் கத்தழ கருளினை போற்றி
முதற்பதி யியல்பு மொழிந்தனை போற்றி
இதப்பரா சத்திமுன் னியம்பினை போற்றி
உயிர்க்கர னுருத்தர லுணர்த்தினை போற்றி
வியக்குமைந் தொழிலியல் விளம்பினை போற்றி
அருளே யாவுமென் றறைந்தனை போற்றி
ஒருவாப் பசுநிலை யுரைத்தனை போற்றி
எண்ணில நித்திய மென்றனை போற்றி
அண்ணலரு ளாற்சார் பறைந்தனை போற்றி
ஏகநித் தியமல மென்றனை போற்றி
ஏகுஞ்சத் திகள்பல வியம்பினை போற்றி
மாயைசுத் தாசுத்தம் வயக்கினை போற்றி
ஆயதத் துவவா லறைந்தனை போற்றி
உயிரிய லவத்தைக ளுரைத்தனை போற்றி
இயல்கே வலஞ்சகல மிசைத்தனை போற்றி
தாக்கிரண் டுறாநிலை தயக்கினை போற்றி
சாக்கிரா தீதமாச் சாற்றினை போற்றி
சுத்தமா மஃதெனத் துலக்கினை போற்றி
உய்த்துணர்ந் திடுமுறை யுரைத்தனை போற்றி
அருளுருக் கூட்டுத லறைந்தனை போற்றி
வருசிவ ஞானமெய் வழங்கினை போற்றி
ஆன்மதரி சனஞ்சுத்தி யறைந்தனை போற்றி
மேன்மை யிலாபம் விளக்கினை போற்றி
இருளற ஞானஞ்சார் பிசைத்தனை போற்றி
வருபணி நீத்துறல் வயக்கினை போற்றி
நேயத் தழுந்த னிகழ்த்தினை போற்றி
மாயப் பவஞ்சமால் மாற்றினை போற்றி
பேய்பிடி யுவமை பேசினை போற்றி
தூயவ தீதநிலை சொறற்னை போற்றி

கேட்டல்சிந் தனையாதி கிளத்தினை போற்றி
வாட்டுவித் துவமை வயக்கினை போற்றி
இறையெழுத் தைந்திய லிசைத்தனை போற்றி
புறமக மௌநநிலை புகன்றனை போற்றி
எண்ணியஞ் செழுத்துமா றிசைத்தனை போற்றி
நண்ணுஞா னார்ச்சனை நவிற்றினை போற்றி
வேடஞ் சிவமெனல் விளக்கினை போற்றி
நாடமு தருந்திய னவின்றனை போற்றி
உலகாய தாதி யொழித்தனை போற்றி
வலசிவாத் துவிதாந்த மறுத்தனை போற்றி
திருவருட் பயன்வகை தெரித்தனை போற்றி
தருபதி யுயிர்மலஞ் சாற்றினை போற்றி
அருளரு ளுருவறி வறைந்தனை போற்றி
தெருளுயி ரின்புற றெரித்தனை போற்றி
ஐந்தெழுத் தருணிலை யறைந்தனை போற்றி
முந்தணைந் தோர்நிலை மொழிந்தனை போற்றி
பலவினா வெண்பாப் பகர்ந்தனை போற்றி
நிலவுபோற் றித்தொடை நிகழ்த்தினை போற்றி
நுண்மைய வரும்பொரு ளுவன்றனை போற்றி
உண்மை நெறிவிளக் குரைத்தனை போற்றி
அதிற்றச காரிய மறைந்தனை போற்றி
இதக்கொடிக் கவிகணான் கிசைத்தனை போற்றி
நெஞ்சுதூ தாவுய்த்த நின்மல போற்றி
விஞ்சுமணி மாலை மேவினை போற்றி
பன்னெறிச் சங்கற்பம் பகர்ந்தனை போற்றி
அன்னெறி மறுதலை யறைந்தனை போற்றி
மெய்ந்நெறி சைவமென விளக்கினை போற்றி
உய்ந்நெறி தெளித்தரு ளொருவ போற்றி
உமாபதி யருணிறைந் துயர்குரு போற்றி
உமாபதி நாமம்வாய்ந் தொளிர்சிவ போற்றி

ஸ்ரீ உமாபதி சிவார்ச்சனை

முற்றிற்று.

உ
சிவமயம்

# ஸ்ரீ நம்பியாண்டர் நம்பி சிவார்ச்சனை

திருவருள் புரிநம்பி சிவனே போற்றி
தருநிக மாகம தவனே போற்றி
சோழநாட் டருந்தவத் தோன்றால் போற்றி
வாழநாட் டருட்சைவ மணியே போற்றி
நாரையூர் புரிவத நாயக போற்றி
பேரரு டரவரு பிரானே போற்றி
தம்பிராற் கணிகவி தாமனே போற்றி
நம்பியாண் டார்நம்பி நாமனே போற்றி
சிவகுல வேதியர் சிரமணி போற்றி
தவமுனி வரர்பணி தரமணி போற்றி
சிவாகம விதிமுறை செய்மணி போற்றி
தவாதுசெய் பரார்த்தபூ சகமணி போற்றி
போற்றுமான் மார்த்தம் புரிமணி போற்றி
நாற்சமக் காரமு நவின்மணி போற்றி
உலகுய வருளரு ளுருமணி போற்றி
அலகிலற் புதச்செய லருமணி போற்றி
பொல்லா விநாயக பூசக போற்றி
எல்லாம் புரிந்தமு தெதிர்வைத்தாய் போற்றி
உண்டருள் கென்றுமுன் னுரைத்தனை போற்றி
கண்டுநின் றன்புரை கழறினை போற்றி
உண்ணிடா மையிற்கவ லுற்றனை போற்றி
எண்ணப சாரம்யா தென்றனை போற்றி
பிழைபொறுத் துண்கெனப் பேசினை போற்றி
அழுதுகன் மோதவாங் கண்ணினை போற்றி
அமுதுமுற் றுணக்கண் டலர்ந்தனை போற்றி
விமலனா யகன்முனம் வீழ்ந்தனை போற்றி
பன்முறை பணிந்து பரவினை போற்றி
நன்முறை நரப்பெறூஉ நயந்தனை போற்றி

சிவாகமா தியவெலாந் தேற்றினை போற்றி
அவாமிகத் துதித்தின் படுத்தனை போற்றி
நாளுமிப் பூசைநேர் நவிற்றினை போற்றி
ஆள்சண்ட பாகமு மருத்தினை போற்றி
விபவமெங் கணுஞ்செல விளங்கினை போற்றி
அபயசே கரரறிந் தடைத்துனைப் போற்றி
பத்துயோ சனைவரை பரப்புண வுண்பிக்க
நத்திவேண் டிடச்சென்று நமந்தனை போற்றி
ஐங்கரன் றிருவுள மறிந்தனை போற்றி
தங்குணா நாற்சுத்தி சமைத்தனை போற்றி
நிவேதனஞ் செய்துமுன் னின்றனை போற்றி
உவாமுக னீள்கைகண் டுவந்தனை போற்றி
யாவுமுண் டிடக்கண் டிறைஞ்சினை போற்றி
கோவுநேர் கண்டுளங் குழைந்தனன் போற்றி
தொண்டர்கள் சரிதமுந் தூயதே வாரமுங்
கண்டுய வருள்கெனல் கருதினை போற்றி
மாமுகன் முன்கேட்டு வந்தனை போற்றி
தேமுறை யிருப்பிடந் தெரித்தனை போற்றி
தொண்டர்பேர்த் தொகையினைத் துலக்கினை போற்றி
கண்டொரோர் செய்யுளாக் கழறினை போற்றி
திருவந் தாதியாத் திகழ்த்தினை போற்றி
அருமந்த வரசொடு மடுத்தனை போற்றி
தில்லைத் திருப்பதி சென்றனை போற்றி
ஒல்லைத் திருநட முவந்தனை போற்றி
திருமுன் பணிந்து திளைத்தனை போற்றி
பரமன் றமிழ்மறை பார்த்தனை போற்றி
எஞ்சிய முழுது மெடுத்தனை போற்றி
விஞ்சருள் கேட்டு வியந்தனை போற்றி
வருமுறை யேழா வகுத்தனை போற்றி
அருளியாங் கவளை யழைத்தனை போற்றி

வருபெண் ணுடன்சபை வந்தனை போற்றி
அருளினாற் பண்முறை யறிந்தனை போற்றி
அவள்வகுத் தாங்கிசைத் தருளினை போற்றி
நவின்முறை யேழின்மே னாடினை போற்றி
திருவாசக கங்கோவை சேர்த்தனை போற்றி
அருளிசைப் பாவாண் டார்த்தனை போற்றி
திருமந் திரமுறை சேர்த்தனை போற்றி
திருமுக முதலபாத் தெரிந்தனை போற்றி
அவற்றொடுன் பாக்கள்சேர்த் தருளினை போற்றி
சிவப்பதி னொருமுறை திகழ்த்தினை போற்றி
முன்னரு டந்தமா முகத்தனைப் போற்றி
இன்னிரு மணிமாலை யிசைத்தனை போற்றி
கோயில் விருத்தங் கூறினை போற்றி
தொண்டரந் தாதிமுன் சொற்றனை போற்றி
தாளருண் ஞான சம்பந்தர்ப் போற்றி
ஆளுடை யந்தாதி யருளினை போற்றி
சண்பை விருத்தந் தந்தனை போற்றி
பண்பெறு மும்மணி பகர்ந்தனை போற்றி
திருவுலா மாலை திகழ்த்தினை போற்றி
தருதிருக் கலம்பகஞ் சாற்றினை போற்றி
கருதுறு திருத்தொகை கழறினை போற்றி
திருநா வரசர் திருவடி போற்றி
திருவே காதசஞ் செப்பினை போற்றி
திருநா வரசர் சிவனேயென் வாய்மை
பெருகார் வத்தினிற் பிறக்கினை போற்றி
பரமகா ரணவீச னெனப்பல போற்றி
அருள்கூ ரரசின்சீ ரறிவித்தாய் போற்றி
ஆறுநூல் சம்பந்தர்க் கணிந்தனை போற்றி
ஆறு முகங்கட்கோ வறிவிப்பாய் போற்றி

ஒருமயி லேந்திய வள்ளன்முன் போற்றி
விரியுண்மை பற்பல விளக்கினை போற்றி
குகனேயென் றுள்ளவா குறித்தனை போற்றி
மகனே யரற்கென வழுத்தினை போற்றி
பதினொரு திருமுறை பகுத்தனை போற்றி
துதிபுரிந் துலகுயத் துலக்கினை போற்றி
இவையெலா மோர்ந்தர சிறைஞ்சிறை போற்றி
நவையெலாந் தீர்த்தரு ணாயக போற்றி
அரசுபே ரின்புற வளித்தனை போற்றி
பரசிமுன் பரிவுறல் பார்த்தனை போற்றி
பிரியா விடைபெறப் பேணினை போற்றி
அரிதா யகலநன் றருளினை போற்றி
சிற்சபே சன்னரு டிளைத்தனை போற்றி
பொற்சபை பணிந்தமர் புண்ணிய போற்றி
ஒருவரு நடங்கண் டுவந்தனை போற்றி
புரிபுலி யூர்நின்றும் போந்தனை போற்றி
நாரையூ ரமலனை நமந்தனை போற்றி
ஒருமர்ச் சனைமுறை யுவந்தனை போற்றி
உலகெலா முயப்பனா ளுற்றனை போற்றி
அலகிலா நலனெலா மளித்தனை போற்றி
திருவரு ணிறைவொடு திகழ்ந்தனை போற்றி
புரியும்வை காசிப் பூசநாட் போற்றி
திருவடி மலர்நிழல் சேர்ந்தனை போற்றி
அருணிலைத் திருவமு தார்ந்தனை போற்றி
அவனியுய்ந் திடவந் தவனே போற்றி
திவியர்போற் றுறுநம்பி சிவனே போற்றி

ஸ்ரீ நம்பியாண்டார் நம்பி சிவார்ச்சனை

முற்றிற்று.

உ

சிவமயம்

# ஸ்ரீசேக்கிழார் சிவார்ச்சனை

திருநடத் திறையருள் சிவனே போற்றி
அருணடை தரவந் தவனே போற்றி
திருத்தொண்டை நன்னாடு செய்தவ போற்றி
அருட்குன்றற யுண்ணாட் டரசே போற்றி
வேளாண் குலஞ்செய் விழுத்தவ போற்றி
வாளார் முதன்மையார் மலிதவ போற்றி
புலியூர்க் கோட்டஞ்செய் புண்ணிய போற்றி
நலனார் குன்றத்தூர் நாயக போற்றி
சேக்கிழார் திருக்குல சிகாமணி போற்றி
சேக்கிழார் நெறிதரு செம்மணி போற்றி
உலகெலா முயவந் தொளிர்மணா போற்றி
அலகிலா வின்பவன் பருண்மணி போற்றி
அருண்மொழித் தேவப்பே ரணிமணி போற்றி
தெருள்விளை யாட்டினுஞ் செய்மணி போற்றி
யாவரும் போற்றுசீ ரெழின்மணி போற்றி
தேவரும் வியப்பத் திகழ்மணி போற்றி
மகன்றந்தைக் காற்றல் வயக்கினை போற்றி
புகன்றதின் மேலும் பொலிந்தனை போற்றி
பாலியத் தினுஞ்சீர் படைத்தனை போற்றி
வாலுணர் தந்தைக்கும் வழங்கினை போற்றி
உலகெலாந் துதிசெயு மொண்மணி போற்றி
நலனெலாந் தருசிவ நண்மணி போற்றி
சோழர்மு வினாவிடை சொன்மணி போற்றி
வாழந பாயனோர் வண்மணி போற்றி
அவன்விழை வோர்ந்துசென் றன்மணி போற்றி
சிவிகையூர்ந் தவன்முனஞ் சென்மணி போற்றி
அரசுவந் தேற்பவந் தருண்மணி போற்றி
வரவமைச் சுரிமைமுன் மருமணி போற்றி
அரசுந் திருந்திய வருண்மணி போற்றி
பொருவரும் புத்திசொல் பொருண்மணி போற்றி

வேந்தம ணூற்சார்பு விலக்கினை போற்றி
சாந்தசித் தாந்தமே சாற்றினை போற்றி
மெய்ப்பயன் றருமென விளம்பினை போற்றி
அப்பயன் யாதென வருளினை போற்றி
நாரையூர் நம்பிசீர் நவின்றனை போற்றி
ஓர்திரு வந்தாதி யுணர்த்தினை போற்றி
அதன்பொருள் விரித்துரைத் தருளினை போற்றி
பதம்பெற வரசைப் பயிற்றினை போற்றி
அன்பரு ணினைந்துரு கரசுவேண் டியவா
நன்பொருள் விரிதர நயந்தனை போற்றி
தொகைமுத னூனம்பி சொல்வகை வழிநூல்
தகுவிரி சார்புநூ றருமுதல் போற்றி
விரிதரர் குரித்திடம் விரிதில்லை யெனநினைந்
துருகுளத் துடனாங் குற்றனை போற்றி
சிற்பர னடங்கண்டு திளைத்தனை போற்றி
முற்பல முறைபணீஇ மொழிந்தனை போற்றி
திருத்தொண்டர் சீர்பரவத் திருமுத லருள்கெனக்
கருத்தொன்ற வேண்டிமுன் கரைந்தனை போற்றி
நலனெலாம் விரிதர ஞானவா னின்றெழும்
உலகெலாம் எனுமநு வோர்ந்தனை போற்றி
அனையவைந் தெழுத்துளத் தழுத்தினை போற்றி
இனியவம் மநுநல மெண்ணினை போற்றி
அகளத்து வந்ததென் னன்பினை போற்றி
சகளத்து வேதமேற் சாற்றினை போற்றி
குருவருண் மொழியின்மேற் கொண்டனை போற்றி
திருவருள் விரிதர நேர்ந்தனை போற்றி
அளவிலா னந்தமுற் றடுத்தனை போற்றி
வளமிகா யிரக்கான் மண்டபம் போற்றி
அதனிடை வீற்றிருந் தருளினை போற்றி
முதமிகு விரிதர முன்னினை போற்றி
அருட்கூத் தனையுளத் தமைத்தனை போற்றி
தெருட்கூட் டவனேயாய்த் திகழ்ந்தனை போற்றி

அவனாகிப் பாடலி னவ்வுண்மை தேர்ந்தவர்
சிவவாக் கெனக்கொளச் செப்பினை போற்றி
உலகெலாம் மநுமுன் னுரைத்தனை போற்றி
சொலவெலாந் தருவிரி தொடங்கினை போற்றி
தொடக்கமுன் னாடொறுஞ் சோழர்கோ னோர்ந்தோர்ந்
தடுக்குமின் புறவிரித் தருளினை போற்றி
நிறைவுமோர்ந் துறுமரசை நேர்ந்தனை போற்றி
நிறையுநின் றிருவேட நேர்கண்டு போற்றி
அடியிறைஞ் சரசுட னடுத்தனை போற்றி
நடனநா யகன்முன் நண்ணினை போற்றி
நமதுசேக் கிழான்பா நயந்துகே ளரசவென்
றுமையொர்பா கன்சொல வுவந்தனை போற்றி
நனிமகிழ்ந் தரசுதொழ நல்கினை போற்றி
இனியபுரா ணந்தரற் கெழுந்தனை போற்றி
அறிந்தவர் பலரையு மழைத்தரசு போற்றி
இறைஞ்சிவேண் டிடமன் றெய்தினை போற்றி
சித்திரை யாதிரைத் திருமுறை சிற்சபை
வைத்துவே தியர்தொழ மன்னினை போற்றி
அரும்பொருள் விரித்துரைத் தருளினை போற்றி
கரும்பினுஞ் சுவைமிகக் கழறினை போற்றி
சுராமு துவர்க்குமா துலக்கினை போற்றி
அருளமு தேயென வளித்தனை போற்றி
தெருளுல கெலாமுறத் திகழ்த்தினை போற்றி
வருபவ மொழிநிலை வயக்கினை போற்றி
நாடொறும் பெருகவே நடத்தினை போற்றி
பீடுல கெலாமுறப் பிறங்கினை போற்றி
யாவரும் வியப்புற விசைத்தனை போற்றி
தேவருந் தமிழ்விழையச் செப்பினை போற்றி
இவ்வகை யாண்டுமுற் றிசைத்தனை போற்றி
தெய்வவா திரைபூர்த்தி செய்தனை போற்றி
புரகர னாமங்கள் புகன்றனை போற்றி
அரகர வொலிப்பெருக் காக்கினை போற்றி
திருவுடை யந்தணர் திருமுறை பூசித்
தரியநீ றாதிதர வணிந்தனை போற்றி

திருமுறை யானைமேற் சேர்த்தர சன்வேண்ட
அருணினைந் ததன்பின் னமர்ந்தனை போற்றி
சிவத்தியா னத்தொடு சென்றனை போற்றி
தவச்சிவ நாமம்வாய்த் தந்தனை போற்றி
அரசுசா மரைப்பணி யாற்றவே திருமறை
பரசவீ தியில்வலம் படர்ந்தனை போற்றி
வீதிய ரெதிர்தொழ மேவினை போற்றி
ஓதியர் துதிசெய வுற்றனை போற்றி
தெய்வமங் கலந்திகழச் சென்றனை போற்றி
செய்யகோ யில்வாயில் சேர்ந்தனை போற்றி
திருமுறை யுடன்முனஞ் சென்றனை போற்றி
உரியசிற் சபையுள்வைத் துவந்தனை போற்றி
திருமுனின் றவசமாய்த் திளைத்தனை போற்றி
பொருவருந் துதிபல புகன்றனை போற்றி
திருவருட் செல்வர்கள் சிறப்பெலாம் போற்றி
அருண்முடித் தமைதெரித் தருளினை போற்றி
தொண்டர்சீர் பரவுபேர் சூடினை போற்றி
கண்டர சிறை[illegible] கனிந்தனை போற்றி
பிரிவாற் [illegible]சைப் பேணினை போற்றி
அருள்வார் சகம்புகன் றாற்றினை போற்றி
அவர்[illegible] விடைதந் தருளினை போற்றி
தவர்பலர் தொழவரு டந்தனை போற்றி
பணிவார்க் கெலாநலம் பகர்ந்தனை போற்றி
தணியாமெய் யன்பெழச் சார்ந்தனை போற்றி
அனையமன் [illegible] தருளினை போற்றி
இனியசிற் சபைதின மிறைஞ்சினை போற்றி
உலகெலா முய்யவந் தொளிர்புரா ணத்துள்
நலனெலா நுகர்ந்தரு ணாடினை போற்றி
இந்நிலை யிற்பனா ளிருந்தனை போற்றி
மன்னுவை காசியில் வயங்குறு பூசத்தில்
நடனகுஞ் சிதபத நண்ணினை போற்றி
திடநிலை யருண்மொழித் தேவனே போற்றி
சேக்கிழார் பதமலர் சென்னிய போற்றி
சேக்கிழார் குடிமுதற் சிவனே போற்றி

ஸ்ரீ சேக்கிழார் சிவார்ச்சனை

முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்

# மன்றப் பணிகள்

1. ஞாயிறு, புதன், வெள்ளி ஆகிய நாள்களில் காலை 7 மணி முதல் 8-30 மணி வரை திருமுறைகளைப் பண்ணோடு பாடி ஆடி வீதிகளில் வலம் வருதல்.

2. அறுபத்துமூன்று நாயன்மார் திருநாள்களில் அவ்வவர் திருவுருவங்களுக்கு அபிடேக அலங்கார அர்ச்சனைகள் செய்து வழிபடுதல்.

3. நால்வர் பெருமக்கள் விழாக்களைச் சிறப்புறக் கொண்டாடுதல்.

4. அன்பர்களுக்கு உரிய தீட்சைகளைச் செய்வித்து சைவ சமய அடியவராக்குதல்.

5. ஆங்கிலப் புத்தாண்டு நாளில் மாணிக்கவாசக சுவாமிகள் பிறந்தருளிய திருவாதவூருக்கும், தமிழ்ப்புத்தாண்டு நாளில் திருப்பரங்குன்றத்திற்கும் திருமுறை ஓதிப்புனித நடையை மேற்கொள்ளுதல்.

6. பாடல் பெற்ற தலங்களுக்கு ஆண்டில் சில நாட்களேனும் புனிதப்பயணம் மேற்கொண்டு உழவாரப்பணி செய்து வழிபடுதல்.

7. விரும்பி அழைக்கும் அன்பர்களின் இல்லங்களுக்குச் சென்று திருமுறைப் பாராயணம் நிகழ்த்துதல்.

8. இலவசமாக சமயவெளியீடுகளை அன்பர்கள் பொருளுதவியால் வெளியிடுதல்.

9. தமிழகச் சைவமன்றங்கள் ஒருங்கிணைந்து, கருத்துப் பரிமாறிக் கொள்ளும் வகையில் 'உழவாரம்' திங்கள் இதழ் வெளியிடுதல்.